கனம் திரு. பூ. கக்கன் : அது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களுக்கு கேள்வி போட வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : வெல்பேர் பாடசாலைகளில் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும், யூனியன் பாடசாலை களில் படிக்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்களும் ஒன்றாக இருந்தும் கூட மதிய உணவில் வித்தியாசம் இருக்கிறது, ஏன் இந்த பார பட்சம் காட்டப்படுகிறது என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வித்தியாசம் காட்டப்படாமல் இருக்க லட்சக்கணக்கில் ரூபாய் வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம், நிதிநிலைதான்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : சேர்வராயன்மலையில் படிக்கிற ஓராசிரியர் பள்ளி மாணவர்களுக்கு ஸ்லேட், புத்தகம், பென், நோட் போன்றவை இலவசமாக கொடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன நலத் துறையிலிருந்து நடத்தப் பட்டால் ஸ்லேட், நோட் எல்லாம் இலவசமாக வாங்கிக் கொடுக்கப் படும்.

திரு. தா. சின்னசாமி : ஷெட்யூல்டு காஸ்ட், பாக்வேர்ட் கம்யூ னிட்டி என்று கூறி ஏழை மாணவர்களுக்கு சர்க்கார் உதவி அளிக் கிறது. ஆகவே எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் ஒரே விதத்தில் ஹரிஜன நலத் துறையிலிருந்து மதிய உணவு அளித்தால் நல்ல முறையில் இருக்குமென்று நினைக்கிறேன். பாக்வேர்ட் கம்யூனிட்டி மாணவர்கள் ஷெட்யூல்டு காஸ்ட் மாணவர்களுக்கு கம்மியில்லை. ஆகவே, ஷெட்யூல்டு காஸ்ட் மாணவர்களுக்கும், பாக்வேர்ட் கம்யூ னிட்டி மாணவர்களுக்கும் ஒரே விதமாக மதிய உணவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கத்தின் கொள்கை என்ன வென்றால் ஹரிஜன நல பாடசாலைகளில் படிக்கிற மாணவர்கள் பாக்வேர்ட் கம்யூனிட்டீஸைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஹரிஜன மாணவர்களாக இருந்தாலும்சரி சமத்துவமாகத்தான் சாப்பாடு போடப்படுகிறது.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் (ஹரிஜனநல இலாகா)

* 332 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் ஹரிஜனநல இலாகாவின்கீழ் நடை பெறும் ஆரம்பப்பள்ளிகளில் (**Labour Schools**) பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கவேண்டிய சம்பள உயர்வு, ஐந்து ஆறு ஆண்டு காலமாகவே கொடுக்கப்படவில்லை என்பதும், அதனால் அப் பள்ளிகளில் பணிபுரிய ஆசிரியர்கள் முன் வருவதில்லை என்பதும், அதனால் அப்பள்ளிகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமலே நடை பெறுகின்றன என்பதும் உண்மையா ?

20th November 1963]

கனம் திரு. பூ. கக்கன் : ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு பாக்கி பற்றிய 1955-60-ம் ஆண்டுகளுக்குரிய 40 மனுக்கள் இன்னும் பைசல் செய்யப்படவில்லை. இவை தவிர, இதே கால அளவில் சம்பள பாக்கி சம்பந்தமான 121 கேசுகள் முன் தணிக்கைக்காக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எடுத்துக்காட்டியுள்ள குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக அவை தணிக்கைத் துறையாலும் ஹரிஜன நலத் துறை நெறியாளராலும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இந்தக் கேசுகளை இயன்ற விரைவில் பைசல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஹரிஜனநலத்துறை நடத்தும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தை முன்னிட்டு அப்பள்ளிகளில் பணி புரிவதற்கு ஆசிரியர்கள் தயங்குவதாகக் கூறுவது உண்மையல்ல. இது காரணமாக, இப்பள்ளிகள் போதிய ஆசிரியர்கள் இல்லாமலேயே நடைபெறுகின்றன என்ற புகாரும் சரியல்ல.

Claims in respect of forty cases of arrears of increments of teachers relating to the years 1955–60 remain to be attended to, besides another 121 cases of arrears relating to the same period which were already presented for pre-audit and which have been returned by the Audit, and the Director of Harijan Welfare for rectification of defects pointed out. Arrangements are being made to dispose of these cases as expeditiously as possible.

It is not a fact that teachers are reluctant to take up employment in the schools run by the Harijan Welfare Department on the ground that there is delay in the sanction of increments. The allegation that schools are run short of adequate staff because of this is also not correct.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பள விகிதங்களை நிர்ணயிப்பதிலும் சம்பளம் அனுமதித்துக் கொடுப்பதிலும் காலதாமதம் ஆகிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இந்த நிலைமை இருப்பதற்கு காரணம், தங்களுடைய ஆபீசில் போதிய பணியாளர்கள் இல்லை எபைதுதான் என்று வேலூர் கலெக்டர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த காலதாமதத்தை போக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது வழிவகை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வட ஆற்காடு மாவட்ட கலெக்டர் அவர்கள் போதிய ஸ்டாஃப் இல்லை என்றும், அப்பர் டிவிஷன் கிளார்க் வேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள். அதன்படி அப்பர் டிவிஷன் கிளார்க் ஸாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இருப்பது போலவே திருச்சி மாவட்டத்திலும் உள்ள

அரிசன நலப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு மாதாந்திர சம்பளம், பிரயாணப்படி இவைகள் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. இதை தவிர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கும் காலதாமதம் ஏற்படக் கூடாது என்று அரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் எல்லா ஜில்லா அதிகாரிகளுக்கும் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அனுப்பியிருக்கிறார்கள். குறிப்பாக எந்த இடத்திலாவது காலதாமதம் ஆகிறது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், தனியாக லேபர் பள்ளிகள் என்று வைத்திருக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா ? இதையும் பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுத்துவிட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. பிற்பட்ட வகுப்பினர்களுக்கு தனிச் சலுகைகள் காட்டவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்விதம் தனியாக் வைக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதிகள்

* 333 கேள்வி—**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-ல் அரிசன மாணவ மாணவியருக்காக தங்கும் விடுதிகள் எங்கெங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

(இ) இதற்குச் செலவிடப்படும் உத்தேச தொகை எவ்வளவு ?

(உ) அரிசனங்களில் எல்லா பிரிவினருக்கும் இதில் இடம் கொடுக்கப்படுமா ?

(எ) ஒவ்வொரு பிரிவினருக்கும் எவ்வளவு இடங்கள் ஒதுக் கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Proposals for the construction of Government Boys Hostels at Tiruvannamalai in North Arcot district and at Ootacamund in the Nilgiris district are under the consideration of the Government.

(*b*) The probable expenditure for the construction of buildings for the Government Boys Hostel, Tiruvannamalai is estimated at Rs. 1.50 lakhs. The plans and estimates for the construction of Government Boys Hostel at Ootacamund have not yet been received by the Government.

(*c*) Yes. Seventy-five per cent of the total strength is reserved for scheduled castes in the hostels mainly intended for Harijan pupils.

(*d*) No separate percentage of seats is allotted for each sect among scheduled castes for admission in the Government Hostels in the State.